**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 198/2019 |
| Name | : Kuppusamy |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கண்ணாடிப்புத்தூர் கிராமத்தில் வசித்து மாட்டு வியாபாரம் செய்து வருகிறேன். 17.05.2017 ம் தேதி காலை 08.00 மணி முதல் 08.30 மணிக்குள் நானும், காளிமுத்துவும் மாடு பார்க்க TVS XL சூப்பர் வண்டியில் சென்று காளிமுத்து வண்டியை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்றேன். மாடு பார்த்து விட்டு காண்ணடிப்புத்தூர் கிராமத்திற்கு வருவதற்காக பாய் தோட்டம் அருகில் ரோட்டில் கிழக்குப் பார்த்து வந்த போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த 407 வாகனம் வேகமாக வந்து மோதியதில் காளிமுத்துவுக்கு தலையின் பின் பக்கத்தில் அடிப்பட்டது எனக்கும் காயம் ஏற்பட்டது எனக்கு உடலில் பல இடத்தில் காயம் ஏற்பட்டது வாகனத்தை பாலமுருகன் என்பவர் ஓட்டி வந்ததாக சொன்னார்கள் என்னை ஆம்புலன்ஸ் மூலமாக தற்போது இறந்துவிட்ட பாலு என்பவர் கொண்டு சேர்த்தார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை

விசாரணை செய்தார்கள.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்